பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

22 06 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – பங்களாதேஷ் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

2. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் ஆலோசனைக்கூட்டத்தில், மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

3. தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசிடமிருந்து விரைந்து நிதி பெற்று தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவையிலிருந்து இரண்டாவது நாளாக அஇஅதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

5. ஸ்பெயின் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே – சீனாவின் **Fangran Tian** இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

அரசுமுறைப்பயணமாக இந்தியா வந்துள்ள பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவுக்கு, குடியரசுத் தலைவர் மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

மத்திய அரசு பதவியேற்றபின் முதல் முறையாக வெளிநாட்டு தலைவருடன் நடைபெறும் முதல் இருதரப்பு கூட்டம் இதுவாகும்.

திருமதி ஷேக் ஹசீனா புதுதில்லியில் உள்ள மகாத்மாகாந்தியின் நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்தினார்.

புதுதில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில், திருமதி ஷேக் ஹசீனா தலைமையிலான பங்களாதேஷ் குழுவினர், பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது.

<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் தொடர்பாக மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

அந்தந்த மாநிலங்களுக்கு தேவைப்படும் நிதி பகிர்வு, வருவாய் தொடர்பான விவகாரங்கள் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

இந்த கூட்டத்தில் மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, நிதிச்செயலாளர் திரு டி வி சோமநாதன் மற்றும் நிதியமைச்சர்களின் உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

ஏற்கனவே, பட்ஜெட் தொடர்பாக விவசாய சங்கங்கள், வேளாண் பொருளாதார வல்லுநர்கள், சந்தை மற்றும் மூலதன முதலீடுகள் துறையின் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

53-ஆவது ஜிஎஸ்டி குழுமக்கூட்டம் புதுதில்லியில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற ஜிஎஸ்டி குழுமக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்துவது தொடர்பாக இந்த கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும்.

புதியதாக பதவியேற்றுக்கொண்ட மத்திய அரசு முதல் முறையாக நடத்தும் இந்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது.

ஜிஎஸ்டி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் தொடர்பாகவும், உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நியமனம் தொடர்பாகவும் சென்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுத.

உணவு தானிய வகைகளை மதிப்புக்கூட்டப்பட்ட வகையில் தயாரிப்பு தொடர்பான நெறிமுறைகளை இயற்றுவதற்கான ஆலோசனைகள் இந்த கூட்டத்தில் இடம்பெறும்.

கால்நடைகளுக்கு தேவையான உணவு தயாரிப்பு, கரும்பு உற்பத்தியாளர்களுக்கான நிலுவைத்தொகை குறித்தும் இந்த கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

<<<<<>>>>>>

போட்டித்தேர்வுகளில் முறைகேடுகளை களைவது தொடர்பாக இயற்றப்பட்ட சட்டம் இன்று முதல் அமல்படுத்தப்படும் என்று மத்திய பணியாளர் நல அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

இதன்படி, முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சமாக பத்தாண்டுகள் சிறை தண்டனையும், ஒரு கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த மசோதா இயற்றப்பட்டது.

பிப்ரவரி 12-ஆம் தேதி இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கினார்.

இதன்படி, மத்திய பணியாளர் தேர்வாணையம், தேசிய தேர்வு முகமை, ரயில்வே ஆள்சேர்ப்பு வாரியம், வங்கித்தேர்வு நடத்தும் அமைப்புகள் அறிவிக்கும் தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெற்றால், இந்த சட்டத்தின்படி, நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

**<<<<<>>>>>>**

மத்திய அரசின் பல்கலைக்கழக மானியக்குழு நடத்தும் நெட் தேர்வு மற்றும் சிஎஸ்ஐஆர் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, தேசிய தேர்வு முகமை வெளியிட்ட அறிவிப்பில், வரும் 25 முதல், 27-ஆம் தேதிக்குள் இந்த தேர்வு நடத்தப்பட வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் **csirnet@nta.ac.in** என்ற இணையதளத்திலும் 011-407 59000 அல்லது 011-6922 7700 என்ற தொலைபேசி வாயிலாக விரிவான தகவல்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>>**

தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசிடமிருந்து விரைவில் நிதி பெற்று தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் வளர்ச்சியை மேம்படுத்தியது போலவே, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

மத்திய – மாநில அரசுகளுக்கு இணைப்பு பாலமாக இருந்து வளர்ச்சியை உறுதி செய்வதாகவும் அவர் கூறினார்.

மூன்றாவது முறையாக பிஜேபி தலைமையிலான அரசு பதவியேற்றிருப்பது வரலாற்று சாதனையாகும் என்று குறிப்பிட்ட திரு எல்.முருகன், பிரதமர் தமக்கு அளித்துள்ள வாய்ப்பை தமிழகத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்த அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக கூறினார்.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் இன்று காலை அவை கூடியதும், எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில், அஇஅதிமுக உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று கேள்விநேரத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர்.

பேரவைத் தலைவர் திரு அப்பாவு கேள்விநேரம் முடிந்ததும் அதற்கான நேரம் ஒதுக்கப்படும் என்றும், உறுப்பினர்கள் தங்களது இருக்கையில் அமருமாறும் கூறினார்.

அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பது மட்டுமல்லாமல் அவையை புறக்கணிப்பது எந்த நோக்கத்தின் அடிப்படையில் என்று கேள்வி எழுப்பினார்.

அவையின் மரபுப்படி உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று திரு அப்பாவு தெரிவித்தார்.

எனினும், இதனை ஏற்றுக்கொள்ள மறுத்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இரண்டாவது நாளாக தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில், கருப்பு உடை அணிந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் பேரவைக்கு வந்திருந்தனர்.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் சாலையை நான்குவழிச்சாலையாக மாற்றுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

பேரவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், நெய்வேலி தொகுதியில் வடக்கு மேலூர் பாச்சாராம்பாளையம் சாலையை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர், அணைக்கட்டு தொகுதிக்கு உட்பட்ட மலை கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் செய்துதரப்படும் என்று கூறினார்.

ஆற்காடு தொகுதி விளாப்பாக்கம் பேரூராட்சிக்கு கிராம நிர்வாக அலுவலகம் கட்டப்படும் என்று மற்றொரு கேள்விக்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் பதிலளித்தார்.

<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி விஷச்சாராயம் சம்பவத்தை கண்டித்து பிஜேபி-யின் சார்பில் இன்று தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டம் திருத்துறைபூண்டியில் தேசிய நெல் திருவிழா இன்று நடைபெறுகிறது.

பாரம்பரிய நெல் விதைகளை அனைத்து விவசாயிகளிடமும் கொண்டுசெல்லும் நோக்கில் இந்த திருவிழா நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

கர்நாடகா மற்றும் கோவாவில் அடுத்த நான்கு நாட்களுக்கு அதிகனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் இன்று பெரும்பாலான இடங்களில் அதிகனமழை பெய்துள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்குவங்கம், சிக்கிம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கனமழை தொடரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் மேற்கு மாவட்டங்களில் வரும் 24-ஆம் தேதிவரை வெப்பம் மூன்று முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அளவிற்கு உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

கேரளாவில் வயநாடு, இடுக்கி, கோழிக்கோடு, மலப்புரம், கன்னூர், காசர்கோட் மாவட்டங்களில் அதிகனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

நாளை கோழிக்கோடு, வயநாடு மற்றும் கன்னூர் மாவட்டங்களில் அதிகனமழை பெய்யும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் கடலோரப்பகுதிகளில் கடல் கொந்தளிப்புடன் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே – சீனாவின் **Fangran Tian** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Alana Parnaby** – மெக்சிகோவின் விக்டோரியா இணையை வென்றது.

<<<<<>>>>>>

உலகக்கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

நார்த்சவுண்டில் நடைபெற உள்ள இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>